சிபிஐ: மத்திய புலனாய்வு அமைப்பு (Central Bureau of Investigation - CBI) இந்தியாவின் முதன்மையான குற்ற விசாரணை நிறுவனமாகும். இது பிரிட்டிஷ் அரசின் 'சிறப்பு காவல் ஸ்தாபனம் (SPE)' என்ற அமைப்பில் இருந்து, 1963 ஏப்ரல் 1-ல் இந்திய உள்துறை அமைச்சகத்தால் சிபிஐ என மாற்றப்பட்டது.

சிறப்பு அதிகாரம்: சிபிஐ தொடக்கத்தில் மத்திய அரசு ஊழியர்களின் லஞ்சம் மற்றும் ஊழல் வழக்குகளை மட்டுமே விசாரித்து வந்தது. 1965-க்கு பிறகு, பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் படுகொலை, கடத்தல் போன்ற தீவிரமான குற்றங்களை விசாரிக்கவும் அதிகாரம் பெற்றது.

ஆசிய அளவிலான தடகள போட்டிக்கு தகுதி பெற்ற வீராங்கனை இ.ஆஷாவை ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா பாராட்டினார்.

ஜப்பானில் நடக்கும் தடகள போட்டிக்கு மதுரை வீராங்கனை தகுதி

மதுரை

மதுரையைச் சேர்ந்த தடகள வீராங்கனை இ.ஆஷா. இவர் ஒடிசா மாநிலத்தில் நடந்த தேசிய அளவிலான சீனியர் தடகளப் போட்டியில் மும்முறை தாண்டுதல் போட்டியில் முதலிடம் பெற்றார். 13.89 மீட்டர் தாண்டி புதிய சாதனை படைத்தார். அதனைத் தொடர்ந்து, அம்மாணவி ஜப்பானில் நடைபெறும் ஏசியன் கேம்ஸ் போட்டிகளில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார். அம்மாணவியை ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா பாராட்டினார். மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், மாவட்ட விளையாட்டு இளைஞர் நலன் அலுவலர் முருகன் உடன் இருந்தனர்.

மக்கள் குறைதீர்க்கும் முகாமுக்கு அழைப்பும், தகவலும் இல்லை

மதுரை மாநகராட்சி மண்டலம்-1 கவுன்சிலர்கள் அதிருப்தி

மதுரை

மதுரை மாநகராட்சி மண்டலம்-1 அலுவலகத்தில் இன்று நடைபெறும் பொதுமக்கள் குறைதீர் முகாமில் பங்கேற்க மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தங்களுக்கு அழைப்பும், தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்று கவுன்சிலர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

மதுரை மாநகராட்சி பகுதியில் வசிக்கும் மக்கள் தங்கள் குறைகளை நேரடியாக ஆணையர் கவனத்துக்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்க மண்டல அலுவலகங்களில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பு வரை செவ்வாய்க்கிழமைதோறும் குறைதீர் முகாம் நடத்தப்பட்டது. தேர்தலுக்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இந்த முகாம் தற்போது மண்டல வாரியாக மீண்டும் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்பேரில் இன்று சர்வேயர் காலனியில் உள்ள கிழக்கு மண்டல அலுவலகத்தில் (மண்டலம்-1) காலை 10 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை மக்கள் குறைதீர் முகாம் நடத்தப்படுகிறது. இந்த முகாமில் 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 16, 17, 18, 19, 36, 37, 38, 39, 40 ஆகிய வார்டுகளைச் சேர்ந்த மக்கள் குடிநீர், பாதாள சாக்கடை இணைப்பு, வீட்டு வரி பெயர் மாற்றம், புதிய சொத்து வரி விதிப்பு, கட்டிட வரைபட அனுமதி, தெருவிளக்கு, தொழில் வரி போன்ற தங்களின் கோரிக்கைகளை மனுக்களாக எழுதிக் கொடுத்தால் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பர்.

இந்த முகாம்கள் கடந்த காலத்தில் நடந்தபோது சம்பந்தப்பட்ட மண்டலத் தலைவர், கவுன்சிலர்களுக்கு மாநகராட்சி தரப்பில் தகவல் தெரிவிக்கப்படும். மேயர், ஆணையர், உதவி ஆணையர், மண்டலத் தலைவர், கவுன்சிலர்களும் இதில் கலந்து கொள்வர். திருவிழா போல், இந்த குறைதீர் முகாம் நடத்தப்பட்டு, அன்றே தீர்வு காணக்கூடிய மனுக்களை மேயர், ஆணையர் பெற்று உடனுக்குடன் ஆணைகள் வழங்கப்படும். ஆணையரும், மேயரும் நேரில் வருவதால் இந்த முகாமுக்கு வர கவுன்சிலர்களும், தங்கள் பகுதி மக்களை அறிவுறுத்துவர்.

இந்த முகாமில் வழங்கப்படும் மனுக்களுக்குத் தீர்வு காண முடியாவிட்டால் மனு வழங்கிய பொதுமக்களுக்கு, அதற்கான காரணங்களைக் கூறி பதில்களை அதிகாரிகள் அனுப்பி விடுவர். எந்தக் கையூட்டும் இன்றி ஆணையரால் நேர்மையாக நடத்தப்படும் குறைதீர் முகாமில் உடனுக்குடன் தீர்வு கிடைத்ததால் மக்களும் முகாம் நடக்கும் நாளில் ஆர்வமாக வருவர்.

இந்நிலையில் இன்று மண்டலம்-1-ல் அறிவிக்கப்பட்ட மக்கள் குறைதீர் முகாமுக்கு கவுன்சிலர்கள் யாருக்கும் மாநகராட்சி தரப்பில் இருந்து அழைப்பு விடுக்கவில்லை என்றும் குறைந்தபட்சம் இந்தத் தகவலைக்கூட தெரிவிக்கவில்லை என்றும் பொறுப்பு மேயரும், ஆணையரும் பங்கேற்பதாக அறிவிப்பு வெளியிட்டுள்ளதாக அவர்கள் ஆதங்கமும், அதிருப்தியும் அடைந்துள்ளனர்.

இதுகுறித்து கவுன்சிலர்கள் கூறியதாவது: ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு மாநகராட்சிக் கூட்டம் தவிர, வார்டு, மண்டல அலுவலகங்களில் நடக்கும் எந்த நிகழ்ச்சிகளுக்கும் கவுன்சிலர்களுக்கு அதிகாரிகள் தகவல் சொல்வதில்லை. தவெக எம்எல்ஏக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்களைப்போல் நாங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான். எங்களுக்கான மரியாதையை, உரிமைகளைத் தர மறுக்கிறார்கள். மாநகராட்சியில் தற்போது திமுகவுக்கு 67 கவுன்சிலர்களும், அதிமுகவுக்கு 15 கவுன்சிலர்களும் மற்றும் சில கவுன்சிலர்கள் உள்ளனர். மேயர், மண்டலத் தலைவர்கள் சொத்து வரிசர்ச்சையில் பதவிகளை இழந்துள்ளனர். தவெகவுக்கு ஒரு கவுன்சிலர்கூட இல்லாததால், மாநகராட்சி நிகழ்ச்சிகளுக்கு தற்போது அனைத்து கவுன்சிலர்களுக்கும் தகவல் தெரிவிப்பதில் அதிகாரிகள் ஆர்வம் காட்டுவதில்லை, என்றனர்.

மதுரையில் நடந்த விஸ்வாஸ் சங்கமம் நிறைவு விழாவில் பங்கேற்றோர்.

விஸ்வாஸ் புரமோட்டர்ஸ் சார்பில் விஸ்வாஸ் சங்கமம் நிறைவு விழா

மதுரை

மதுரை தல்லாகுளம் லட்சுமி சுந்தரம் ஹாலில் விஸ்வாஸ் புரமோட்டர்ஸ் சார்பில் 'விஸ்வாஸ் சங்கமம்' நிறைவு விழா நடைபெற்றது.

விஸ்வாஸ் புரமோட்டர்ஸ் இயக்குநர் பத்மலட்சுமி குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார். இயக்குநர் வசுதா வரவேற்றார். நிர்வாக இயக்குநர் சங்கர சீதாராமன் தன் அனுபவங்கள், நிறுவனத்தின் வளர்ச்சி, அதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் குறித்து பேசினார். விஸ்வாஸ் புரமோட்டர்ஸ் வெள்ளி விழா ஆண்டை முன்னிட்டு புதிய லோகோவை தியாகராஜர் மில்ஸ் நிர்வாக இயக்குநர் ஹரி தியாகராஜன், சாலமன் பாப்பையா ஆகியோர் இணைந்து அறிமுகப்படுத்தினர்.

தமிழறிஞர் சாலமன் பாப்பையா தலைமையில் பட்டிமன்றம் நடந்தது. பேச்சாளர்கள் பாரதி பாஸ்கர், கண்ணன், ராஜ்குமார், ராஜா, ரேவதி சுப்புலட்சுமி, ராஜாராம் ஆகியோர் பேசினர். எம்எல்ஏ கார்த்திகேயன், தொழில் வர்த்தக சங்க தலைவர் ஜெகதீசன் உட்பட பலர் பங்கேற்றனர். விழா ஏற்பாடுகளை இயக்குநர்கள் ஸ்ரீமதி, ஜெய்சந்தர், தலைமை நிர்வாக அதிகாரி ஸ்ரீகுமார் சுவாமிநாதன் ஆகியோர் செய்தனர்.

மதுரையில் குழந்தை திருமணம் 7 பேர் மீது வழக்கு பதிவு

மதுரை

மதுரை திருப்பரங்குன்றம் பகுதியில் 16 வயது சிறுமிக்கு திருமண ஏற்பாடு நடப்பதாக மதுரை சமூக நல அலுவலர் அன்னபூரணிக்கு ஜூலை 4-ம் தேதி தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து அதிகாரிகள் சம்பந்தப்பட்ட சிறுமியின் பெற்றோரிடம் விசாரணை நடத்தி அவர்களிடம் 18 வயதுக்குள் திருமணம் செய்ய மாட்டோம் என எழுதி வாங்கி எச்சரித்தனர்.

இந்நிலையில் அடுத்தநாள் 5-ம் தேதி அனுப்பானடி பகுதியில் வைத்து அலங்காநல்லூரைச் சேர்ந்த முத்துப்பாண்டி (23) என்பவருக்கு அந்த சிறுமியை திருமணம் செய்து கொடுத்திருப்பது தெரிந்தது. இது தொடர்பாக அன்னபூரணி கொடுத்த புகாரின் பேரில் முத்துபாண்டி, பாலு கணேஷ், சந்திரா, நாகராஜ், அவரது மனைவி சத்யா, மணி, அவரது மனைவி பழனியம்மாள் ஆகிய 7 பேர் மீது மதுரை நகர் மகளிர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

பழநி கோயிலில் தங்க ரத புறப்பாடு கட்டணம் உயர்வு

கருத்து தெரிவிக்க இன்று கடைசி நாள்

பழநி

பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலில் தினமும் இரவு 7 மணிக்கு தங்கரதப் புறப்பாடு நடைபெறுகிறது. ரூ.2,000 செலுத்தினால் 3 பேர் தங்க ரதம் இழுக்கவும், 5 பேர் சிறப்பு தரிசனம் செய்யவும் அனுமதிக்கப்படுகின்றனர்.

அவ்வாறு தங்க ரதம் இழுக்கும் பக்தர்களுக்கு சிறப்பு பிரசாத தொகுப்பு வழங்கப்படுகிறது. சாதாரண நாட்களில் ஒரு நாளைக்கு குறைந்தது 50 முதல் 100 பக்தர்களும், விசேஷ நாட்களில் ஒரு நாளைக்கு 200 முதல் 400 பக்தர்கள் வரையும் தங்க ரதம் இழுத்து வழிபடுகின்றனர். 2011-ம் ஆண்டு முதல் 15 ஆண்டுகளாக தங்கரதம் இழுப்பதற்கான கட்டணம் உயர்த்தப்படவில்லை. இந்நிலையில் தங்கரதம் இழுக்கும் பக்தர்களுக்கு தரமான பிரசாதப் பொருட்களை வழங்க கட்டணத்தை ரூ.2,000-ல் இருந்து ரூ.2,500 ஆக அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பக்தர்களுக்கு ஆட்சேபனை இருந்தால் எழுத்துப்பூர்வமாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம் என தேவஸ்தானம் அழைப்பு விடுத்தது. இதையடுத்து, ஏராளமானோர் தங்கள் கருத்துகளை நேரிலும், தபால் மூலமும் தேவஸ்தானத்துக்கு அனுப்பி வருகின்றனர். கட்டண உயர்வு குறித்து கருத்துகளை பதிவு செய்வதற்கான அவகாசம் இன்றுடன் (ஜூலை 7) முடிவடைகிறது. எனவே, விருப்பமுள்ளவர்கள் நேரிலோ, தபால் மூலமாகவோ தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம். அவ்வாறு வரப்பெற்ற கருத்துகளை ஒருங்கிணைத்து அறநிலையத்துறையிடம் அறிக்கையாக சமர்ப்பிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

நகரில் நடப்பவை

மதுரை

- பண்பாட்டு இலக்கிய நிகழ்வு, திருவள்ளுவர் மன்றம், தலைப்பு- அபிராமி அந்தாதி, பேசுபவர்- பூங்கொடி, சக்தி வேலம்மாள் நகர், மாலை 5.
- ஆனி மாத பிரம்மோற்சவம் 7-ம் நாள், ஸ்ரீனிவாசப் பெருமாள் கோயில், சவுராஷ்டிர பிராமண தர்ம பரிபாலன சபை, மீனாட்சிபுரம் 2-வது தெரு, பல்லக்கு, காலை 8, ஹனுமார் வாகனம், இரவு 7.

Canara Bank கனரா வங்கி | Syndicate சிண்டிகேட்

சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I
524, 8வது தளம், வட்டார அலுவலக கட்டிடம், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600018 Ph : 044 -28496339

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, கடனீட்டு சொத்துக்கள் (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6)/9(1) உடன் கீழ், அசையா சொத்துக்களின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கனரா வங்கியில் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்துக்களை **கனரா வங்கி, (தற்போது சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, சென்னைக்கு மாற்றப்பட்டுள்ளது)** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனத்தில் எடுக்கப்பட்டு கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களிடமிருந்து பெற வேண்டிய கடன் தொகையான **30.06.2026 அன்றுள்ளபடி ₹ 2,79,01,225.72** (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்தொன்பது லட்சத்து ஒன்றாயிரத்து இருநூற்று இருபத்தைந்து மற்றும் பைசா எழுபத்திரண்டு மட்டும்) மற்றும் வட்டி, இதர செலவுகளை, கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I வசூலிப்பதற்காக கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் **23.07.2026 அன்று விற்பனை செய்யப்படும்** என இதன் மூலம் பொது மக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தாரர்/ஜாமீன்தாரர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்கள்: 1.M/s.நியூடன் லெதர் எக்ஸ்போர்ட்ஸ், எண்.13/1D, 1வது தளம், காட்டூர் சடையப்பன் தெரு, பெரியமேடு, சென்னை - 600003, **2.Mr.M சுஹூருதீன்,** எண்.13/1D, 1வது தளம், காட்டூர் சடையப்பன் தெரு, பெரியமேடு, சென்னை - 600003, **3.Mr.M.நிசாமுதீன், 4.Mrs.தாஜ்னிஷா,** W/o.Mr.M.நிசாமுதீன், **இருவரது முகவரி,** கதவு எண்.7, M R R நகர், பேகம்பூர் அஞ்சல், திண்டுக்கல் - 624002.

அசையா சொத்து விவரம்

திண்டுக்கல் ஜாயிண்ட் II சார் பதிவு மாவட்டம் & சார் பதிவாளர் அலுவலகம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்கள்.560/3F,3G,3H and 3E, **மனை எண்.39, "ராஜீவ் காந்தி நகர்", செட்டிநாயக்கன்பட்டி கிராமம், திண்டுக்கல் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இருபக்கமும் 40 அடி, தெற்கு வடக்காக இருபக்கமும் 66 அடி ஆகமொத்தம் **2640 சதுர அடி காலி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். **(Mrs.தாஜ்னிஷா பெயரில் உள்ள சொத்தானது ஆவண எண்.6154/2009-ல் உள்ளடக்கப்பட்டுள்ளது)** எல்லைகள்: வடக்கு: 20 அடி அகல கிழக்கு மேற்கு ரோடு, தெற்கு: சர்வே எண்.561-ல் உள்ள கிழக்கு மேற்கு ஓடை, சர்வே எண்.564/3B-ல் உள்ள EB காலனி ரோடு, மேற்கு: சர்வே எண்.560/3E-ல் உள்ள மனை எண்.40.

குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை	ஏல உயர்வுத்தொகை
₹ 14,00,000/-	₹ 1,40,000/-	₹ 50,000/-

இ-ஏல தேதி & நேரம் 23.07.2026 நேரம்: காலை 10.30 முதல் 11.30 வரை (விற்பனை முடியும் வரை ஒவ்வொரு 5 நிமிட காலவரையற்ற நீட்டிப்புகளுடன்)

டேவணித் தொகையினை 22.07.2026 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ மாலை 5.00 மணிக்குள் செலுத்த வேண்டும்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் முன் அனுமதி பெற்று சொத்தினை பார்வையிட தேதி மற்றும் நேரம்: 21.07.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

குறைந்தபட்ச கேட்பு விலையில் 10% டேவணித் தொகையினை M/s PSB Alliance Private Limited (Baanknet) இன் இணையதளத்தில் நேரடியாகவோ அல்லது Challan எடுத்து Challan இல் குறிப்பிட்டுள்ள கணக்கில் RTGS/NEFT மூலமாகவோ செலுத்த வேண்டும்.

விற்பனையின் விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் இணைய தளத்தில் (www.canarabank.com) வழங்கப்பட்ட மின் ஏலம் என்ற இணைப்பை பார்க்கவும். அல்லது வங்கியின் சேவை வழங்குனர் BAANKNET (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No. 70466 12345 / 63549 10172 / 82912 20220 / 98922 19848 / 81602 05051, Email:support.baanknet@psballiance.com) அல்லது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, சென்னை-600 018 (Ph.No. 044 - 2849 6339 / 2849 6900) E-mail: cb2361@canarabank.com எந்தவொரு வேலை நாட்களிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

Portal of E-Auction: https://baanknet.com

தேதி : 03.07.2026, இடம் : சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கனரா வங்கி

केनरा बैंक Canara Bank | सिंडिकेट Syndicate

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை-மதுரை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை-625001.

சுவாதீன அறிவிப்பு - பிரிவு 13(4) விதி 8(1) (அசையா சொத்துக்களுக்கானது)

கனரா வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் 2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் & நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் (Act 54 of 2002) மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் மேற்கூறிய சட்டத்தின் 13(12)-வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விதி 3-க்கு ஏற்பவும், கடன்தாரர் / ஜாமீன்தாரர் **1. M/s. ஸ்ரீ சரவணா கன்ஸ்ட்ரக்‌ஷன்ஸ்,** லக்ஷ்மிபுரம், பழனி-624601, **2. திரு.A.K.சரவணன்,** த/பெ.திரு.K.கிட்டுசாமி, அக்கரைப்பட்டி, நரிக்கல்பட்டி, பழனி-624601, **3. திருமதி.R.கல்பனா,** க/பெ.திரு.A.K.சரவணன், அக்கரைப்பட்டி, நரிக்கல்பட்டி போஸ்ட், பழனி-624601, **4. திரு.K.கிட்டுசாமி,** த/பெ.திரு.குப்புசாமி கவுண்டர், அக்கரைப்பட்டி, நரிக்கல்பட்டி, பழனி-624601, **5. திரு.P. அய்யப்பன்,** த/பெ.திரு.பொன்ராஜ், வீரகுமார் இல்லம், தோட்டத்து சாலை, குமாரசாமி கவுண்டன்புதூர், அத்திக்கொம்பை, ஒட்டன்சத்திரம்-624619, **6. திருமதி.V.சீதாலெக்ஷ்மி,** க/பெ.திரு.விஜயகுமார், 18/2, துவாரகா அவென்யூ, ஆண்டிப்பாளையம், இடுவம்பாளையம், திருப்பூர்-641687 ஆகிய முகவரிதாரர்களுக்கு, ஏற்கனவே சர்ஃபாசி சட்டம் 2002-ன் கீழ் (Ref: SARFAESI/24-25) கடந்த 20.09.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பிற்கு எவ்வித பாதிப்புமின்றி தற்போது நல்ப்பு சர்ஃபாசி சட்ட விதிகளின் படி கடந்த 18.03.2026 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் கூறப்பட்டுள்ள கடன் நிலுவைத் தொகையான ரூ.4,38,93,292.53 (ரூபாய் நான்கு கோடியே முப்பத்தெட்டு இலட்சத்து தொண்ணூற்று மூன்றாயிரத்து இருநூற்று தொண்ணூற்று இரண்டு & பைசா ஐம்பத்து மூன்று மட்டும்)-ஐ + வட்டி, கட்டணங்கள் சேர்த்து **60** நாட்களுக்குள் செலுத்தக் கோரி அறிவிப்பு அனுப்பப்பட்டது. கடன்தாரர் மேற்கூறிய கடன் தொகையை திரும்பச் செலுத்தத் தவறியதால், கடன்தாரர் & பொது மக்களுக்கு இவ்வறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது யாதெனில், கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4)-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், விதிமுறைகளின் விதி 8&9-க்கு இணங்கவும், **03.07.2026** அன்று கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இந்த அறிவிப்பின் மூலம் குறிப்பாக கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் மற்றும் பொது மக்களுக்கு எச்சரிப்பது என்னவென்றால், அடையாள உடமை எடுத்துக் கொண்ட இந்த சொத்து, **கனரா வங்கிக்கு** செலுத்த வேண்டிய தொகையான 30.06.2026 அன்று ரூ.**3,88,55,298.77** (ரூபாய் மூன்று கோடியே எண்பத்து எட்டு இலட்சத்து ஐம்பத்தைந்தாயிரத்து இருநூற்று தொண்ணூற்று எட்டு & பைசா எழுபத்தேழு மட்டும்) + 01.07.2026 முதல் வட்டி, இதர கட்டணங்களுக்கு பிணையாக உள்ளது என்பதால் யாரும் கீழே குறிப்பிட்டுள்ள சொத்து மீது எந்தவித நடவடிக்கைகளும் மற்றும் தொடர்புகளும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. சர்ஃபாசி சட்டம் 2002, பிரிவு 13(8)-ன் கீழ் கூறியுள்ள பிணைய சொத்துக்கள் மீட்பதற்கான கால அவகாசம் பொருந்தும் என்பதை சம்பந்தப்பட்ட கடன்தாரர்/ஜாமீன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வருவதற்காக இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

அசையா சொத்து விவரம் : உரிமையாளர் - **திரு.P.அய்யப்பன்.** திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தாலுகா, ஒட்டன்சத்திரம் சார் பதிவாளர் அலுவலகம், அத்திகொம்பை கிராமத்தில் :- **ஐட்டம் எண்.1 :** சர்வே எண்.49/3B1-இல் கிழக்கே உள்ள 1.23.87 ஹெக்டேர் நிலத்தில் உள்ள 3 ஏக்கர் 3.06 சென்டுகள் நிலத்தின் **நான்கு மால் :** வடக்கே-சர்வே எண்.49/3A-இல் உள்ள நிலங்கள், கிழக்கே-ஓடை & சர்வே எண்.49/3C, மேற்கே-வழிப்பாதைக்காக அத்திகொம்பை பஞ்சாயத்திற்கு அளித்த நிலம், தெற்கே-சர்வே எண்.52/1 & கருப்பத்தாள் நிலம், கிணறு, 5 HP மின்சார மோட்டார் பம்ப் செட், தொட்டி, ஓடை பிற.. மின் இணைப்பு எண்.SC 05-261-010-212. ஆழ்துளை கிணற்றுடன் கூடிய 5 HP மின்சார மோட்டார் பம்ப் செட் உள்ளது. **ஐட்டம் எண்.2 :** சர்வே எண்.49/3C-இல் உள்ள 0.09.0 ஹெக்டேர் நிலத்தில் உள்ள 0 ஏக்கர் 22 சென்டுகள் நிலத்தின் **நான்கு மால் :** வடக்கே-சர்வே எண்.49/3B-இல் உள்ள நிலங்கள், கிழக்கே-தென்வடல் ஓடை, மேற்கே-சர்வே எண்.49/3B1, தெற்கே-கருப்பத்தாள் நிலம். மேற்கூறிய ஐட்டம் 1 & 2 ஆகிய சொத்துக்கள் சேர்த்து மொத்தம் 3.28 ஏக்கர் அல்லது 328 சென்டுகள் & அதிலுள்ள கட்டிடம் வழக்கமான வழிப்பாதை & ஈஸ்மெண்ட் உரிமைகளுடன் அமைந்துள்ளது.

நாள் : 03.07.2026 — அங்கீகாரம் பெற்ற அதிகாரி
இடம் : மதுரை — கனரா வங்கி

வரி விளம்பரங்கள்

பொது

பொது அறிவிப்பு

அசல் சொத்து ஆவணத்தின் தாள்களை காணவில்லை

எனது கட்சிக்காரரான மதுரை-625018, தத்தனேரி (அஞ்சல்), தீக்கதிர்-பைபாஸ் அய்யனார் காலனி 2-வது தெரு, கதவு எண். 40 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. முத்தையா அவர்களின் மகன் மு.சந்திரசேகரன் தந்த முறையான தகவலின் பேரில் பொது மக்களுக்கு தெரிவித்து கொள்வது என்னவெனில்,

மதுரை அரசரடி சார்-பதிவாளர் அலுவலகத்தில் கடந்த 15.02.2022-ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட லேட். திருமதி. வேல்ராணி - விஜயலெட்சுமி ஆகிய இருவரின் பெயரில் பதிவான அசல் ஆவணம் எண். 683/22 ஆகும். இந்த ஆவணத்தில் மொத்த அசல் தாள்கள் 16. இதில் 9 முதல் 16 வரையிலான அசல் ஆவணத்தின் தாள்கள் கடந்த 22.06.2026-ம் தேதி தவறிவிட்டது. அசல் ஆவணத்தின் தாள்கள் தொலைந்தது குறித்து மதுரை நகர், செல்லூர் காவல் நிலைய குற்றப் பிரிவில் லேட். திருமதி. வேல்ராணி அவர்களின் சட்டப்பூர்வ வாரிசான எமது கட்சிக்காரர் காணாமல் போன அசல் ஆவணத்தின் 9 முதல் 16 வரையிலான தாள்களை கண்டுபிடித்து தரக்கோரி புகார் அளித்துள்ளார். மேற்சொன்ன அசல் ஆவணத்தின் தொலைந்து போன 9 முதல் 16 தாள்களை யாரேனும் கண்டுபிடித்தால் எனது கட்சிக்காரரான மு. சந்திரசேகரன் முகவரிக்கோ அல்லது அவரது தொலைபேசி (99435-76943) எண்ணிற்கோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
மு.இராஜேந்திரன்
வழக்கறிஞர் மாவட்ட நீதிமன்றம் மதுரை

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: கதவு எண்.24, புது அக்ரஹாரம், பழனி ரோடு, JCB மருத்துவமனை அருகில், நேருஜி நகர், திண்டுக்கல், தமிழ்நாடு-624001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புநடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, **"உள்ளது உள்ளவாறு"** மற்றும் **"உள்ள இடத்தில் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
160735025000019 / 1.Mr.சங்கர் 2.Mrs.முத்துலட்சுமி	(i) 30.07.2025 & 29.07.2025 அன்றுள்ளபடி ₹ 4,89,946/- (ரூபாய் நான்கு லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தாறு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.12.2025 & நேரடி சுவாதீனம் - 03.03.2026	04.07.2026 அன்றுள்ளபடி ₹ 6,00,042.33 (ரூபாய் ஆறு லட்சத்து நாற்பத்து இரண்டு மற்றும் பைசா முப்பத்து மூன்று மட்டும்)	₹ 4,09,000/- (ரூபாய் நான்கு லட்சத்து ஒன்பதாயிரம் மட்டும்)	₹ 40,900/- (ரூபாய் நாற்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)

சொத்து விவரம்: திண்டுக்கல் பதிவு மாவட்டம், செந்துறை சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட சர்வே எண்.294/4B, **கதவு எண்.5/124, சேத்தூர் கிராமம்** என்னும் முகவரியில் **2 ½ செண்ட் நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: முத்தையா வீடு, தெற்கு: பழனியாண்டி வீடு, கிழக்கு: முத்து சிதம்பரம் மற்றும் இதர புஞ்சை, மேற்கு: வழிப்பாதை.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 29.07.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
28.07.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	27.07.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : **Mr.ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ சாஜன் – 78451 92961.**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr.**பிரபாகரன் **Mob.74182 81709**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தேதி: 07.07.2026 — உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் (ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபேர்வே, தரை &, முதல் தளம், சர்வே எண் 10/1,11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கோரமங்களா உள்வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர் - 560071

தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

நிதிச் சொத்துகளின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பு உரிமை அமலாக்கச் சட்டம், 2002 (SARFAESI சட்டம்)-இன் கீழ் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட அசையாச் சொத்துகள் விற்பனை.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட் இன் கீழே கையப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி SARFAESI சட்டத்தின் கீழ் கீழ்காணும் அட்டவணை சொத்தை **20-09-2024** அன்று சுவாதினம் எடுத்துள்ளார்.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஏற்கனவே இச்சொத்தை விற்பனை செய்வதற்காகப் பல பொது ஏலங்களை நடத்தியுள்ளார்; ஆனால், ஏலக் கோரல்கள் (bids) எதுவும் பெறப்படாததால் அவை தோல்வியடைந்தன. எனவே, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து **பதினைந்து (15) நாட்களுக்குள்** மேற்கூறிய கடன் கணக்கில் உள்ள நிலுவைத் தொகை முழுமையாகச் செலுத்தப்படாவிட்டால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு 'தனியார் ஒப்பந்தம்' (private treaty) மூலம் சொத்தை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வங்கியின் நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, வங்கிக்கு ஏற்புடைய நிபந்தனைகளின் அடிப்படையில், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்து 'தனியார் ஒப்பந்தம்' மூலம் விற்பனைக்கு **"உள்ளபடியே"(As is where is basis) மற்றும் "இருக்கின்ற நிலையிலேயே"(As is what is basis)** என்பதைப் பொதுமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தனியார் ஒப்பந்தம் மூலம் சொத்தை விற்பனை செய்வதற்கான நிலையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு:

1. தனியார் ஒப்பந்தம் மூலமான விற்பனையானது **"உள்ளபடியே"(As is where is basis) மற்றும் "இருக்கின்ற நிலையிலேயே"(As is what is basis)** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
2. வாங்குபவர், இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட காலக்கெடு முடிவடையும் போது விற்பனைத் தொகையில் 100%-ஐயும் செலுத்த வேண்டும்.
3. வங்கி கொள்முதல் கோரிக்கையை (offer) ஏற்காத பட்சத்தில், விண்ணப்பத்துடன் செலுத்தப்பட்ட தொகை ஏதேனும் இருந்தால், அது வட்டி ஏதுமின்றி நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்படும்.
4. வாங்குபவர் சொத்து தொடர்பான அனைத்து அம்சங்களையும் (தனியார் ஒப்பந்தம் மூலம் விற்கப்படும் சொத்து) தனது திருப்திக்கேற்ப முழுமையாக ஆய்வு செய்து சரிபார்க்க வேண்டும். இது தொடர்பாகப் பிற்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அல்லது பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குநருக்கு (Secured Creditor) எதிராக எந்தவொரு கோரிக்கையையும் முன்வைக்க வாங்குபவருக்கு உரிமை இல்லை.
5. எந்தவொரு காரணமும் குறிப்பிடாமல் கொள்முதல் கோரிக்கையை நிராகரிக்கும் உரிமையை வங்கிக்கு உண்டு.
6. சொத்தை வாங்குவது தொடர்பான முத்திரைத் தாள் கட்டணம் (stamp duty), பதிவு கட்டணம் மற்றும் பிற செலவுகள், வரிகள், கட்டணங்கள் மற்றும் சங்க நிலுவைத் தொகைகள் அனைத்தையும் வாங்குபவரே ஏற்க வேண்டும்.
7. விற்பனையானது SARFAESI சட்டம் / விதிகளின் விதிகளுக்கு உட்பட்டு நடைபெறும்.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	கடன்தாரர்/ இணை-கடன்தாரர்பெயர்	SARFAESI சட்டத்தின் கீழ் 13-2 கோரிக்கை அறிவிப்பின்படி தொகை	தனியார் ஒப்பந்தத்தின் ரிசர்வ் தொகை
1	31699630000592	1.திரு.பாலமுருகன் மதுரை வீரன் த/பெ.மதுரை வீரன், 2.திருமதி.ராஜ ராஜேஸ்வரி முருகன், க/பெ.பால முருகன்	22.06.2024, ரூ.9,61,329.50 ரூபாய் ஒன்பது லட்சத்து அறுபத்தோறாயிரத்து முன்னூற்று இருபத்து ஒன்பது மற்றும் பைசா ஐம்பது மட்டும்) 19.06.2024 அன்றைய தேதியில்	ரூ.6,00,000/- (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்)

பாதுகாப்பு சொத்தின் விவரம் : திண்டுக்கல் மாவட்டம், பழனி பதிவு மாவட்டம், வடமதுரை சார் பதிவு மாவட்டம், வேடசந்தூர் தாலுக்கா, எரியோடு தாலுக்கா, பழைய நத்தம் சர்வே எண்.78, புதிய சர்வே எண்.78/32, இதற்கு உட்பட்ட அளவீடு கீழ்மேல் இருபுறமும் 28 அடி, தென்வடல் இருபுறமும் 56 அடி ஆக மொத்தம் 1562 சதுரடி. **நான்கு எல்லைகள் : தெற்கில் :** கீழ்மேல் அரசாங்க ரோடு, **வடக்கில் :** கீழ்மேல் தெரு, **மேற்கில் :** மணிவேலுக்கு சொந்தமான நிலம், **கிழக்கில் :** ஈஸ்வர மூர்த்திக்கு சொந்தமான நிலம்.

மேற்கூறிய கடன்தாரர்கள்/இணை கடன்தாரர்களின் கவனத்திற்கு SARFAESI சட்டத்தின் பிரிவு 13(8)-ன் விதிகளுக்கு இணங்க, மேலே குறிப்பிட்டுள்ள நிலுவைத் தொகை, அனைத்து கட்டணங்கள், வங்கிக்கு ஏற்படும் செலவுக் கட்டணங்கள் மற்றும் செலவுகள் அனைத்தையும் அடமான சொத்தினை விற்பனை செய்வதற்கு முன் செலுத்தி மீட்டுக்கொள்ளலாம்.

தொடர்பு முகவரி : திரு.மணிகண்டன் B (Mob. No.8300661886), Email: manikandan.b@jana.bank.in & திரு.ராஞ்சன் நாயக் (Mob. No.6362951653), Email: ranjan.naik@janabank.com & கௌசிக் பாக் (Mob. No.7019949040), Email: kaushik.bag01@jana.bank.in. ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட், எண்.10, கிருஷ்ணாபுரம் காலனி மெயின் ரோடு, மகாத்மா காந்தி நகர், மதுரை - 625014.

நாள் : 06.07.2026, இடம் : மதுரை — Sd/- (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி) ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859 & 860, Anna Salai, Chennai-600002 and Printed by Narayanan Santhanam, at Survey Nos. 38/2 to 40/2B, Madurai-Rameswaram Road, Puliankulam Village, Madurai South Taluk, Madurai-625201 on behalf of KSL MEDIA LIMITED., Chennai-600002. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).